www.Padasalai.Net www.TrbTnpsc.com

V10SS

விருதுநகர் மாவட்டம்
முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - ஜனவரி 2024

வகுப்பு 10

நேரம்: 3.00 மணி **சமூக அறிவியல்** மொத்த மதிப்பெண்கள்: 100

## பகுதி - I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **14×1=14**

1) பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார்?
அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பர்லின் இ) உட்ரோவில்சன் ஈ) பால்டுவின்

2) திருச்சிராப்பள்ளி சுதந்திர பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
அ) பூலித்தேவர் ஆ) மருது சகோதரர்கள்
இ) கோபால நாயக்கர் ஈ) வீரபாண்டிய கட்டபொம்மன்

3) சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எதன் பின்னனியில் நிறைவேற்றப்பட்டது?
அ) கோல் கிளர்ச்சி ஆ) இண்டிகோ கிளர்ச்சி
இ) முன்டா கிளர்ச்சி ஈ) தக்காண கலவரங்கள்

4) 1709-ல் தரங்கம்பாடியில் ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவியவர் ...............
அ) கால்டுவெல் ஆ) F.W. எல்லிஸ் இ) சீகன்பால்கு ஈ) மீனாட்சி சுந்தரனார்

5) **சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்:**
**கூற்று** : குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட், தனித்திருத்தல் கொள்கையிலிருந்து மாறவேண்டியதின் அவசியத்தை உணர்ந்தார்.
**காரணம்** : அவர் 1941 இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.
அ) கூற்றும் காரணமும் சரி.
ஆ) காரணம் சரி ஆனால் கூற்றுடன் பொருந்தவில்லை.
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு.
ஈ) காரணம், கூற்று ஆகிய இரண்டுமே தவறு.

6) **பொருந்தாதைத் தேர்ந்தெடுக்கவும்:**
இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகள்
அ) அட்சப்பரவல் ஆ) உயரம் இ) மண் ஈ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம்

7) சேஷாசலம் உயிர்க்கோளப் பெட்டகம் அமைந்துள்ள மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப்பிரதேசம் இ) மத்தியபிரதேசம் ஈ) கர்நாடகா

8) ............... என்பது ஒரு வாணிபப் பயிர்.
அ) பருத்தி ஆ) கோதுமை இ) அரிசி ஈ) மக்காச்சோளம்

9) மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு ...............
அ) வரைபடவியல் ஆ) மக்களியல் இ) மானுடவியல் ஈ) கல்வெட்டியல்

10) தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது?
அ) இராமநாதபுரம் ஆ) நாகப்பட்டினம் இ) கடலூர் ஈ) தேனி

11) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர்
அ) குடியரசுத்தலைவர் ஆ) இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர்
இ) ஆளுநர் ஈ) பிரதம அமைச்சர்

12) இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?
அ) வங்காளதேசம் ஆ) மியான்மர் இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா

13) ............... இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுத்தது.
அ) நீலப்புரட்சி ஆ) வெள்ளைப்புரட்சி இ) பசுமைப்புரட்சி ஈ) சாம்பல் புரட்சி

14) கருப்பு பணத்திற்கான காரணங்கள் என கண்டறியப்பட்ட அடையாளம் எவை?
அ) பண்டங்களின் பற்றாக்குறை ஆ) அதிக வரி விகிதம்
இ) கடத்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

## பகுதி - II

**ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி. கட்டாய வினா எண் - 28.** **10×2=20**

15) முஸ்தபா கமால் பாட்சா வகித்த பாத்திரமென்ன?
16) பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது?
17) பன்னாட்டு நிதியமைப்பின் (IMF) நோக்கங்கள் யாவை?
18) இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
19) தங்களுடைய எழுத்துக்களின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்பு செய்த ஆளுமைகளைப் பட்டியலிடு.
20) தக்காணபீடபூமி - குறிப்பு வரைக.
21) அதிக மழைபெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.
22) வளத்தை வரையறுத்து அதன் வகைகளைக் குறிப்பிடுக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



23) தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்களை எழுதுக.
24) தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.
25) நீதிப்பேராணை என்றால் என்ன?
26) ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் யாவை?
27) உலகமயமாக்கலின் நேர்மறையான தாக்கங்கள் இரண்டினை எழுதுக.
28) விகித வரிவிதிப்பு முறை என்றால் என்ன?

## பகுதி - III

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **10×5=50**
**கட்டாய வினா 42.**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
   i) கட்டபொம்மன் ............. என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
   ii) 'ஒரு பைசாத் தமிழன்' பத்திரிகையைத் துவக்கியவர் ............. ஆவார்.
   iii) மும்பை மற்றும் டெல்லியை அடுத்த இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் ............. ஆகும்.
   iv) இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் .............
   v) ............. ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.
30) ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
31) 1806-ல் வேலூரில் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
32) தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா. பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்க.
33) தென்மேற்குப் பருவக்காற்று குறித்து எழுதுக.
34) இந்தியாவில் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.
35) தென்னிந்தியாவில் நிலவும் நீர் பங்கீட்டு பிரச்சனைக்கு ஏதேனும் தீர்வை உங்களால் கொடுக்க முடியுமா?
36) அ) **வேறுபடுத்துக:**
   i) ராபி பருவம் - காரிப் பருவம்
   ii) அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்
   ஆ) **காரணம் கூறு:**
   மழைநீர் சேமிப்பு அவசியம்
37) இந்திய குடியரசுத் தலைவரின் சட்டமன்ற மற்றும் நீதி அதிகாரங்களை விவரி.
38) பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் (OPEC) திட்டம் குறித்தும் அவ்வமைப்பு எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன என்பது குறித்தும் குறிப்பிடுக.
39) பன்னாட்டு நிறுவனங்களின் (MNC) நன்மைகள் மற்றும் தீமைகளை சுருக்கமாக எழுதுக.
40) கருப்பு பணம் என்றால் என்ன? அதற்கான காரணங்களை எழுதுக.
41) **காலக்கோடு வரைக:**
   1920 - 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42) **இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
   1. டெல்லி 2. குவாலியர் 3. ஜான்சி 4. பர்தோலி 5. லக்னோ

## பகுதி - IV

***கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி:*** **2×8=16**

43) அ) முதல் உலகப்போருக்குப்பின் ஏற்பட்ட பொதுவான வளர்ச்சிப் போக்குகள் யாவை?

**(அல்லது)**

ஆ) 9 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

44) அ) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை நிரப்புக:**
ஆரவல்லி, நர்மதை, தக்காணபீடபூமி, பாரதீப், கட்ச் வளைகுடா, கொச்சி, தேயிலை விளையும் பகுதி, வண்டல் மண் காணப்படும் பகுதி.

**(அல்லது)**

ஆ) **தமிழ்நாடு வரைபடத்தில் குறிக்க:**
இந்தியப் பெருங்கடல், கன்னியாகுமரி, வைகை அணை, விமான நிலையம் (ஏதேனும் ஒன்று), காவிரி ஆறு, எண்ணூர், மேட்டூர் அணை, வேடந்தாங்கல்

------------

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com